10வது ஆண்டில்

விளம்பரம்™
VLAMBARAM™

☎ (416) 282-8059
(416) 282-4978

உலக தமிழோசை®
ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நதி 10 AUGUST 01, 2000 பாலம் 15

❊ அப்பிள் புற்றுநோயைத் தவிர்க்குமா? (பக். 02)
❊ வாகன சாரதிப்பத்திரம் பெற இருப்பவர்களிற்கு (பக்.13)
❊ 47வது இந்திய தேசிய விருது (பக். 07)
❊ பாவித்த வாகனம் வாங்குபவர்களிற்கு (பக். 03)
❊ ஆட்டிலறி அன்னம்மாவின அதிரடித் தாக்குதல்! (பக்.12)
❊ கிரிக்கெட் உலகில் முரளிதரன் முன்னணியில் (பக்.6)
❊ 2001இல் வீட்டின் விலை எவ்வாறு இருக்கும்? (பக். 17)
❊ அமிலப் பதார்த்தம் பல்லை எவ்வாறு தாக்குகிறது? (பக். 4)



RE/MAX
Crossroads Realty Inc., REALTOR
Independently Owned and Operated

வீடு வாங்க, விற்க
பூரண ஆலோசனை பெற
Raja M. Mahendran, P. Eng.
Sales Representative
MEMBER OF RE/MAX HALL OF FAME
MEMBER OF RE/MAX PLATINUM CLUB
(416) 491-4002
Pager: (416) 589-4270

இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்
சபோனாவிற்கு!
SABONA
& Gift
☎: (416) 264-8787 ☎: (416) 2?9-8?51
2602 B Eglinton Ave. E., Scarborough

## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

- பிறரை வெல்லுவது வெற்றியல்ல, தனது கீழான இயல்பை வெல்லுவதே வெற்றி. தன்னையே வென்றவனை விண்ணவரும் மண்ணவரும் அலைக்கழிக்க முடியாது.
- தன்னைத் திருத்தி அமைப்பதற்கும், தூயவன் ஆக்குதற்கும் மனிதன் எடுத்துக் கொள்ளும் முயற்சி பிரார்த்தனை எனப் பெயர் பெறுகிறது.
- அறிவிலிகள் புகழ்ச்சிக்காக வினை ஆற்றுகின்றனர். தொடுத்தகருமம் வெற்றி கரமாய் முடியுமெனக் கண்டால் கோழைகளும் அதைத் துணிந்து செய்கின்றனர். வீரனோ புகழையும் வெற்றியையும் பொருள்படுத்தாது வினையாற்றுகிறான்.
- அகிலாண்டமும் தானும் ஒன்று என்று உணர்பவனுக்குத் தனித்திருத்தல் என்பது எதற்கு
- கடவுளின் அருகில் செல்லச் செல்ல உள்ளத்தில் சாந்தி ஓங்குகிறது.
- சுயநலத்தை வளர்க்கும் செயல் யாவும் துன் மார்க்கம். சுயநலத்தைத் தவிர்க்கும் செயல் யாவும் சன்மார்க்கம். ஆதலால் பரநலத்தையே விரும்பு.

## கியூபா (Cuba)

*மாலினி பஞ்சலிங்கம்*

அத்திலாந்திக் சமுத்திரத்தின் மத்திய அமெரிக்க நாடுகளுக்கு அருகே "கரீபியன் கடல்" [Caribbean Sea], பகுதியில் அமைந்துள்ள ஒரு தீவாகும்.

**பரப்பளவு: 42,803 ச. மைல்கள்**

**மக்கள் சனத்தொகை: 10 846,000 பேர் (1992ஆம் ஆண்டு மதிப்பீட்டின் படி)**

**தலைநகரம்:** ஹவானா (Havana)
அத்திலாந்திச் சமுத்திரக் கடற்கரையோரமாக உள்ளது

**சுதந்திரம்:** மே 20, 1902 இல் சுமார் 4 ஆண்டுகள் அமெரிக்க ஆக்கிரமிப்பிலிருந்து சுதந்திரம் கிடைத்தது

**மொழி:** ஸ்பானிஷ்

**சமயம்:** திரு. பிடல் கஸ்ரோ அதிகாரத்திற்கு வரமுன் 85% ரோமன் கத்தோலிக்க மதமே பின்பட்டது
அதற்கு முன்னர் டிசெம்பர் 10, 89 இல் ஸ்பெயின் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் கிடைத்தது.

ஸ்பானிஷ், அமெரிக்க சட்டங்களை பின்பற்றினாலும், முற்று முழுவதுமாக கம்யுனிச, சோசலிச கோட்பாடுகளின் அடிப்பயிலேயே ஆட்சி நடாத்தப்படுகின்றது. திரு. பெடல் காஸ்ரோவின் தலைமையில் கீழ் ஏனைய எந்த அரசியல் கட்சியும் இல்லாத ஒரே கட்சி தலைமையாக நிர்வாகம் நடைபெறுகின்றது.

## உன்னை அறிந்தால்

தெரிந்ததை தெரியாததும், தெரியாததை தெரிந்ததும் என்று கூறுவதாலும், அறிந்ததை அறியாததாகவும், அறியாததை அறிந்ததாகவும் விளக்கமில்லாமல், விளங்கிக் கொள்ள முடியாமல், முன்னுக்குப் பின் முரண்பாடாக கதைப்பது சிலரின் இயல்பு. இவர்கள் யதார்த்தத்தை விட்டு விலகி நடப்பவர்கள் என்றே கூறமுடியும். தன்னுடைய நிலைமையை உயர்த்த வேண்டும் என்பதில் பலரிற்கு இரு கருத்துக்கள் இருப்பது சரியென்று சொல்வது தவறு. ஆனால் தனக்கு விளங்காததை மற்றவர்களிற்கு விளங்க வைப்பது தவறு என்று சொல்பவர்கள் சிலர் இருக்கிறார்கள். பலமட்டங்களிலும், தட்டுகளிலும், வாழ்வின் வெவ்வேறு நிலைகளிலும் வாழ்பவர்கள் வித்தியாசமான விசயங்களை விளங்கிக் கொள்ளும் திறன், ஆய்வு, கருதுகோள்கள், முடிவு வேறு வேறாக இருக்கும். இதுதான் யதார்த்தம். இது பிழையென்று இல்லை. வாழ்வின் நியதி, வாழ்ந்த முறை, வளர்க்கப்பட்டமுறை, சூழ்நிலை இவையே இவற்றிற்குரிய காரணிகள். ஆனால் சமூக நிலையிலிருந்து, யதார்த்தம் என்று சொல்லி இல்லாத உலகத்தைக் கற்பனை பண்ணி அல்லது இருப்பதாக கற்பனை பண்ணிக் கொண்டு கொடுக்கும் முடிவுகள் சரியா? செய்யும் செயல் குறைந்தது ஒரு வீதமக்களிற்காவது புரியா விட்டால், விட்டில் பூச்சி கதை என்று சொல்வதைத் தவிர வேறு என்ன ? நல்லதை நினைப்போம். நல்லதை செய்வோம். இன்றும் நமதே, நாளையும் நமதே. நல்லதைச் சிந்திப்போம்.. நல்லதே நடக்கும். -நெற்றிக்கண்ணன்

**உலக தமிழோசை மூலம் ஆக்கங்கள் தருபவர்கள் பிரதி சனி தோறும் 12:15மணிக்கு CTBC இல்**



SINGAPORE CELLUAR
$29.00
Mon. - Fr. 6:00 p.m to 8a.m FREE
Sat. & Sun. FREE & Much More
$49.00
3 Months Service
Numeric + Voice
+ Activation FREE PAGER
$55.00 +Taxes / Month
7 a.m. - 7 p.m. 400min. இலவசம்
7 p.m. - 7 a.m. கிழமை நாள் இலவசம்
Fri. 7 p.m. - Mon. 7 a.m. இலவசம்
மேலதிக நிமிடம் 20 சதம் மட்டுமே
CANTEL
Bell Mobility
Mobile Message, Call Waiting, Call Display
per second billing included.
மேலதிக விபரத்திற்கு சக்தி: (416) 745-2378
HOTLINE: (416) 980-1234

துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221



சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480
திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA
TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் (62)



-விஜே குலத்துங்கம்

*An apple a day keeps the doctor away* என்று ஆங்கிலத்தில் அடிக்கடி கூறும் வாக்கியம் உண்டு. அதாவது ஒரு நாளைக்கு ஒரு அப்பிள் வீதம் சாப்பிட்டு வந்தால், நீங்கள் வைத்தியரை தள்ளி வைக்கலாம் என்பதாகும். அப்பிள் சாப்பிட்டால் நோய்கள் வராது, வைத்தியரை நாட வேண்டிய அவசியம் இல்லை என்பதாகும். இதுவரை காலமும் அப்பிளில் உள்ள விற்றமின் 'C' யே இதற்குக் காரணம் என நம்பப்பட்டு வந்தது. ஆனால் ஆராய்ச்சியாளர்கள் அப்பிளின் சதையிலும், தோலிலும் உள்ள புற்று நோயை எதிர்க்கக் கூடிய இரசாயனப் பொருட்களை ஆராய்ந்து உள்ளார்கள். இந்த இரசாயனப் பொருட்களாவன Flavanoidsம் Polyphenol களும் ஆகும். இவற்றின் Anti - Oxidant இயல்புகளை விஞ்ஞானிகள் ஆராய்ந்து இதைப் பற்றிய கண்டு பிடிப்புகளை 'Nature' என்ற விஞ்ஞான சஞ்சிகையில் கட்டுரையாக வெளியிட்டு உள்ளார்கள்.

இந்த anti-oxidant எனப்படும் பொருட்களாவன புற்று நோய்க் கலங்களின் வளர்ச்சியையும் பெருக்கத்தையும் கட்டுப்படுத்துகின்றது. நியூயோர்க்கிலுள்ள Cornell பல்கலைக் கழகத்தில் செய்த பரிசோதனையில் 100 கிராம் அப்பிளை சாப்பிட்டால் அது 1500 மில்லி கிராம் விற்றமின் 'C' கொடுக்கக்கூடிய anti-oxidant அளவு தாக்கத்தைக் கொடுக்கும் என கூறியுள்ளார்கள்.



அப்பிளில் உள்ள இரசாயனப் பொருட்.கள் அலேர்ஜிக்கு எதிர்ப்புக் காட்டக்கூடியதாகவும், வீக்கமடைதலைக் கட்டுப்படுத்தவும், வைரசுகளுக்கு எதிர்ப்புள்ளதாகவும் இருக்கின்றன. இதனால் பல நோய்கள் வராதவாறு அப்பிள் பாதுகாக்கின்றது. புற்று நோய்க்கு எதிர்ப்பைக் காட்டும் Phytochemicals இனது தாக்கத்தை அறிவதற்கு கோலோன் புற்றுநோய்க் கலங்களை பரிசோதனைக்கு உட்படுத்தினார்கள். இந்த ஆராய்ச்சியில் அப்பிள் தோலில் இருந்து எடுக்கப்பட்ட 50 மில்லி கிராம் Phytochemicals புற்று நோய்க் கலங்களின் பெருக்கத்தை 43 வீதத்தால் குறைத்தது. அப்பிள் சதையிலிருந்து எடுக்கப்பட்டது, 29 வீதத்தினால் புற்று நோய்க் கலங்களின் பெருக்கத்தை குறைத்தது. எனவே அப்பிள்களை ஒவ்வொரு நாளும் சாப்பிடுவது உடல்நலத்திற்கு அவசியம் ஆகும். அதுவும் தோலைச் சீவி எறியாமல் தோலுடன் சாப்பிடுவதே நல்லது. ஆனால் அப்பிளை நன்கு கழுவி சாப்பிடுதல் வேண்டும். அப்பிள் மாத்திரமல்லாது நாளாந்த உளவில் அதிகளவு பழங்கள் மரக்கறி வகைகள் ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளல் மிகவும் நன்மையை அளிக்கும்.

*************

மருத்துவ ஆராய்ச்சியில் இன்னுமொரு செய்தி Type II நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இருதய நோய்கள், Storke போன்றவற்றை விற்றமின் 'E' ஐ எடுப்பதன் மூலம் குறைத்துக் கொள்ளலாம் என்பதே இந்தச் செய்தியாகும். உலகின் நீரிழிவு நோய் உள்ளவர்களின் 90 வீதமானோருக்கு Type II நீரிழிவு நோய்தான் உள்ளது. இதனை இன்சுலினில் தங்கியிராத Diabetes Mellitus என்று கூறுவார்கள். இது உள்ளவர்களில் இன்சுலினின் தாக்கம் இல்லாமல், இரத்தத்தில் சீனிச்சத்து அளவில் கூடுகின்றது. இதனால் மாரடைப்பு, Storke போன்றவை நேரிடலாம்.

விற்றமின் E யில், நீரிழிவு உள்ளவர்களில் இருக்கும் தாக்கத்தை அறிய பரிசோதனைகள் ரெக்சாஸ் பல்கலைக் கழகத்தில் நடாத்தப்பட்டது. இதில் 25 நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு மூன்று மாதங்களுக்கு 1200 IV அளவு விற்றமின் E கொடுக்கப்பட்டது. சாதாரணமாக நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இரத்தக் குழாய்களில் வெண்குருதிக் கலங்கள் படிந்து அவற்றை தடிப்படையச் செய்கின்றன. இப்படி இரத்தக் குழாய்கள் தடிப்படைவதினால் தான் மாரடைப்பு, Stroke போன்றவை ஏற்படுகின்றன. ஆனால் பரிசோதனையில் விற்றமின் E கொடுக்கப்பட்ட போது இந்த படிவு குறைந்து, இரத்தக் குழாய்கள் தடிப்படைவது மிகவும் குறைவாக காணப்பட்டது. இது மாத்திரமல்ல விற்றிமின் E ஒரு anti-oxidant ஆகவும் தொழிற்படக்கூடியது.

*************

எம்மில் பலர் Krazy glue எனப்படும் பரவலாக ஒட்டுவதற்கு பயன்படும் ஒருவித பசையைப் பற்றி அறிந்திருப்பார்கள். உடைந்த Clay இனால் செய்யப்பட்ட பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள் போன்று பலதரப்பட்ட பொருட்களையும் ஒட்டுவதற்கு இந்த Krazy Glue பயன்படுகின்றது. தற்போது இந்த Krazy Glue இனால் இன்னொரு பயனும் உள்ளது என கூறப்படுகின்றது. ரொரன்ரோவில் உள்ள Sunny Brook வைத்தியசாலையைச் சேர்ந்த தோல் வியாதி நிபுணரான Dr. Marvin Lester இன் கூற்றுப்படி கடதாசியினால் ஏற்படும் வெட்டுக்கள் போன்ற சிறிய வெட்டுகளுக்கு Krazy Glue மூலம் ஒட்டலாம் என்று அறியப்படுகின்றது.

ஆனால் இந்த Krazy Glue வைப் பாவிக்கும் போது மிகுந்த கவனம் எடுக்க வேண்டும். எங்களில் பலர் வீட்டில் இந்த பசையை உபயோகிக்கும்போது, தவறுதலால் முட்டுமேயானால் உடனே ஒட்டி விடும் இப்படி ஒட்டினால் பிரித்தெடுப்பது மிகவும் கடினம் தவறுதலாக ஒட்டிவிட்டால் பலவந்தமாக பிரிக்கமுயலக்கூடாது. விரல்களுக்கு பெண்கள் சாயம் பூசும் கியூடெக்ஸ் ஐ அகற்றுவதற்காக Nail Polish Remover என்னும் திரவத்தை உபயோகிப்பார்கள். இத்திரவத்தை உபயோகித்து Krazy Glue வைக் கரைத்து விரல்களை நாம் இலகுவாக பிரித்தெடுக்கலாம். சூடான சவர்க்காரத் தண்ணீராலும் கழுவலாம்.

பொதுவாக எங்கள் உடம்பில் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டால் அ
குணப்படுவது உடற்கலங்களின் வளர்ச்சி மூலம்தான். இயற்கை
காயங்களை குணமாக்கும் வல்லமை உடற்கலங்களுக்கு உண்டு. ஆ
வழக்கமாக காயங்கள் ஏற்பட்டால் பிளாஸ்டர் போட்டு மூடிவிடுகின்றே
இதற்குக் காரணம் கிருமிகள் உள்ளே புகு
தடைப்படுத்துவதற்காகத்தான். அத்துடன் வெட்டுக் காயம் மேலும் பிளக்க
அதை ஒன்று சேர்த்து வைப்பதற்குமாகத்தான். இது தவிர பிளா
காயங்களைக் குணப்படுத்த உதவுவதில்லை. பிளாஸ்டர் செய்யும் வேலை
Krazy Glue செய்யும் என தோல்வியாதி வைத்திய நிபுணர்கள் கூறுகின்றார்

சாதாரமாக கடைகளில் காணப்படும் Krazy Glue சிறிது நச்சுத் த
வாய்ந்தது. ஆனால் சிறிய அளவில் உடலில் பாவிக்கப்பட்டால் பா
இல்லை. வைத்திய நிபுணர்கள் பிரத்தியேகமாக நச்சுத் தன்மை அகற்ற
Dermabond என்ற Krazy Glue வை உபயோகிக்கின்றார்கள்.

எனவே இனிமேல் முதலுதவிச் சிகிச்சைப் பெட்டியினுள் ஒரு சிறிய Krazy
ஒன்றை வைத்திருப்பது பிரயோசனமாகவிருக்கும்.

*****************************************************


*"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான*
*விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்க*
*61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்தி*
*அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.*


11 வருடங்களாக தமிழர் மத்தியில்

யோகாஸ்

☎: (416) 267-0408


## குறுக்கு எழுத்து போட்டி இல. 11



**இடமிருந்து - வலம்**

1. நாயனம்
3. ஆம் (வல-இட)
4. சொந்தக்காரர்கள்
5. யானையின் மகவு
9. இளநகை
12. கடல்
14. சாவி (வல-இட)
15. கம்பு

**மேலிருந்து கீழ்**

1. கடவுள் நம்பிக்கை இல்லாதவன்
2. ஊக்கம்
6. அடைப்பு நீக்கு (கீழ்-மேல்)
7. அத்தாட்சி (கீழ்-மேல்)
8. பெரிய நீர் நிலை
10. வெற்றி
11. நீர்
12. ஆலமரம்
13. வீட்டு வளர்ப்பு பிராணி

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் AUGUST 27, 2000க்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.




**#109இல் வெற்றி பெற்றோர்**
1) T. ஜெயந்தி. Toronto. Ont.
2. தர்மராஜா V. Scarborough. Ont.

கடந்த குறுக்கெழுத்து போட்டியில் ஏற்பட்ட தவறுக்
மனம்வருந்துகிறோம். திருமல், கருங்காலி இரண்டு
விடைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.


*இலங்கை, இந்திய, கனேடிய உண*
*பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, ம*
*மீன், கணவாய் மற்றும் சகல விதமான உண*
*பொருட்களுக்கும் நாடுங்கள்*

S.G.M
steam carpet cleaning
*சோபா செற் *வீடுகள் *காரின் உட்புறம்
*Apartments*Condominiums*carpets
மிகவும் குறைந்த செலவில் செய்துகொள்ள இன்றே அழையுங்
Toronto
Home: (416) 754-0963
Cell:(416) 455-9402
கணேஸ்
Missi
(905) 403-013

# APPLEMORE AUTOMOTIVE


உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing




- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple

## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")

* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING





>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

## J DAYCARE



- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- ECE தகுதி பெற்ற நடத்துனர்
- TAX RECEIPT வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00

தினசரி நடவடிக்கைகள்-: உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு: Mrs. S.J. சௌந்தரநாயகம் **(416) 502-3033**

*(Finch/Birchmount) 151 Lamareaux Dr., TownHouse 99A, Scarboro, Ont. M1W 2J9*

நியூ மிலேனியத்தில்
ஸ்காபரோவில் 9 வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**

## NTE AUTO INC.
**New Trade Engineering**

## என். ரி. இ. ஓட்டோ இங்க்

Contact: Sivabalan சிவபாலன்

**Tel: (416) 750 - 1573**

151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



In New Millennium We are entering 9th year service in Scarborough

## கலைமகள் புத்தக நிலையம்

- சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- *CREDIT LEVEL* தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605


3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH, ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

பூட்டு? சாவி?


## KEERTH LOGSMITH

**வீடு-வியாபாரம்-தொழிலகம்**



வீட்டு திறப்புகள் தொலைந்து விட்டதா?
மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது
சகலவித திறப்பு சம்பந்தமான
பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில்
வைத்திருக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்

(416) 439-3709
Pager: 375-7330



## பல்லுப்போனால் சொல்லுப் போகுமா?

Dr. M. உமா
பல்வைத்திய நிபுணர்




சென்ற இதழில் பல்லில் உருவாகும் முரசு வியாதியைப் பற்றி அறிந்தீர்கள். இந்த இதழில் பற்சூத்தையைப் பற்றிப் பார்ப்போம்.

### Dental Caries (பற்சூத்தை)

பற்சூத்தையான சில காரணிகளின் சேர்க்கையால் உருவாக்கப்படுகிறது.

1. Bacteria: வாயில் பொதுவாகக் காணப்படும் நுண்அங்கி.
2. உணவுப் பதார்த்தங்கள் (முக்கியமான சீனிப் பதார்த்தங்கள்) இவை நாம் உணவு உண்டபின் பற்களின் மேற்பரப்பில் படிந்து காணப்படும்.

சீனிப்பதார்த்தங்கள் பக்ரீரியாவின் தாக்கத்திற்கு உள்ளாகும் போது ல்க்ரிக் அமிலம் (Lactic Acid) உருவாக்கப்படுகிறது. அமிலம் அரிக்கும் தன்மை உடையது என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இவ்வாறாக பல்மேற்பரப்பில் தொடர்ச்சியாக உருவாக்கப்படும் அமிலத்தினால் (அமிலத்தன்மையால்) பல்மிளிரியானது (Enamel) அரிப்புக்குள்ளாகிறது.




இதனால் பல் பன்மிளிரியில் சிறு துவாரங்கள் உருவாக்கப்படுகிறது. இவ்வாறாக பன்மிளிரி தாக்கத்திற்கு உள்ளாகும் போது உருவாகும் பற்சூத்தை Enamel Caries என்று சொல்லப்படும். இதனைத் தொடர்ந்து Bacteria பின் தாக்கத்திற்கு பன்முதல் (Dentin) உள்ளாகிறது. இவ்வாறாக பல்முதல் தாக்கத்திற்கு உள்ளாவதால் உருவாகும் பற்சூத்தை Dentinal Caries என்று சொல்லப்படும்.



இந்நிலையில் பற்சிகிச்சை பெறாவிடில் Bacteria வின் தாக்கத்திற்கு பல்மச்சைக்குழி (Pulp) உள்ளாகிறது. இதனால் பல்மச்சைக்குழியில் வீக்கம் (Pulpitis) உருவாகிறது. இவ்வாறாக பல்மச்சைக் குழியை அடையும் நுண்அங்கிகள், பல்வேரையும் தாக்கி பல் தாங்கும் இழையங்கயும் தாக்குகின்றது. இதனை Periapical Periodontitis என்று சொல்லப்படும்.

**இதற்குரிய சிகிச்சை முறை அடுத்த இதழில் பார்ப்போம்.**

**Neelam SILK**
**நீலம் சில்க்**

2000ஆம் ஆண்டின் புதிய புடவைத் தெரிவுகளை நம்மவர்களுக்கு அறியத்தருகிறார்கள் 'நீலம் சில்க்'

**உயர்ரகப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்**

- முகூர்த்தப்பட்டுப் புடவைகள்
- பாரம்பரிய பட்டுப் புடவைகள்
- Thread Work பட்டுப்புடவைகள்
- ரிசு சேலைகள்
- காஞ்சி 2000 ரிசு சேலைகள்
- Emboss Tissue சேலைகள்,
- Cut Work சேலைகள்
- ஆூர்வா 2000 Cut Work



**புதிய வெளியீடுகள்**
மைசூர் சில்க் சேலைகள்,
சோனா மீனா (Sona Meena)
புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள்

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"
'நீலம் சில்க்'

1453 GERRARD STREET EAST (Indian Bazzar)
CALL: (416) 778- 7455 FAX: (416) 778-8484

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**
Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12
Professional Photographer - கதிர்



☎: (416) 750-8118
2381 EGLINTON AV. E.
KENNEDY/ EGLINTON, SCARBOROUGH

**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை!**




**416-631-6322**

CRIMINAL கிறிமினல் வழக்குகள்
DOG BITES SLIP & FALL

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்பு கணித்தல்
- பலன் பார்த்தல்
- எண் சோதிடப்படி ஆலோசனை கூறுதல்




☎: 299-8361

# IMMA TRADING COMPANY

MANUFACTURE - IMPORTS - EXPORTS - WHOLESALE

**CLEARENCE SALE**

*Every Friday, Saturday and Sunday*
*10am - 09pm.*

IMPORTED READY MADE GARDMENTS CHILDRENS, LADIES AND GENTS WEAR

**cash & carry**

* **Stainless Steels Cookware**
* **Bed Spread**
* **Mint Blanket**
* **Quality Clock and Gift Items and More...**





**Tel: (416 609-0827**
**Fax: (416) 283-3218**
**Cell: (416) 930-0910**

**785 Middlefield Rd., #21, Scarborough, Ontario M1V 4Y5**

# infoTamils Online

**தொழில்நுட்ப வளர்ச்சியின் காலத்திற்கேற்ப**
**உங்கள் வர்த்தக நிறுவனங்கள் பற்றிய**
**விபரங்களை internet ல் இலவசமாக விளம்பரம்**
**செய்துகொள்ள இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.**

## www.infotamils.com

If you are a business-owner wishing to attract that special Tamil market, take the opportunity NOW to advertise with infoTamils Online.
Need help moving your company into the exciting and profitable world of Internet marketing?

**For movies show times visit infoTamils Online**

Contact infoTamils Online Today!
http://www.infotamils.com
Toll free: 1 888-257-2891
e-mail : info@infotamils.com

# விளையாட்டுத் தகவல்கள் (58)

-எஸ். கணேஷ்



### சாதனை மேல் சாதனை படைக்கும் தமிழ் வீரன் முத்தையா முரளீதரன்

## கிரிகெட்

எட்டுத் திசையும் கப்பல் கட்டிய தமிழன் இன்று எட்டுத் திசையும் பலவித துறைகளிலும் புகழ் பரப்புகிறான். விளையாட்டுத் துறையை எடுத்துக் கொண்டால் அண்மைக்காலங்களில் முழு உலகமுமே வியந்து நோக்கும் முத்தையா முரளீதரன், சோனியா ஜெயசீலன், மற்றும் கஜன் சிவபாலன், ஜெயகரன் திருச்செல்வம் மேலும் பல வீரர்களைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். இவர்களில் கிரிக்கெட் விளையாட்டில் சிறந்த வீரன் முத்தையா முரளிதரன் என்றால் அது மிகையாகாது. கிரிகெட் விளையாட்டில் முரளிதரனை விட்டால் இலங்கையின் கதி என்ன? என்ற கேள்விக்கு முழுப்பதிலுமே இன்று முரளிதரன் எனலாம்.

சென்ற உலக தமிழோசை இதழில் Singer Cup Traingular Series இல் இலங்கை இரண்டு தடவையில் பாகிஸ்தானையும் இரண்டு தடவைகள் South Africa யையும் மண்கவ்வச் செய்தது என்பதை பார்த்தோம். இறுதிப்போட்டியில் எவருடனும் தோல்வியுறாமல் இலங்கை அணி சவுத் ஆபிரிக்க அணியுடன் மோதியது. இதில் இலங்கை அணி 30 ஓட்டங்களால் வெற்றிபெற்று Singer Cup ஐ தனதாக்கியது.

இவ் இறுதிப்போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு காரணகர்தாவாகிய முரளிதரன் Man of The Match விருதை வென்று கொண்டார். இதில் 10 ஓவர்கள் பந்து வீசி 44 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதில் முக்கிய விக்கெட்டுகளான Kirsten, Hall, Klusener, Pollock அனைத்துமே முரளீதரன் கைப்பற்றினார். One Day ஆட்டத்தில் நான்காவது தடவை ஒரே ஆட்டத்தில் 5 விக்கெட்டுகளை கைப்பற்றி சாதனை படைத்துள்ளார்.

27 வயதுடைய முத்தையா முரளிதரன் ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களில் இதுவரை 194 விக்கெட்டுகளையும், Test ஆட்டங்களில் 278 விக்கெட்டுகளையும் கைப்பற்றி உள்ளார். உலகத்திலேயே தற்போது- Spin பந்து வீசுவதில் முதல் இடத்தில் உள்ள இவர் கிரிகெட் ரசிகர்களால் Magic Off Spinner என வர்ணிக்கப்படுகின்றார். ஆடுகளத்தில் இவருடைய பந்துகள் Spin பண்ணி திரும்பும் விதம் பல சிறந்த துடுப்பாட்ட வீரர்களையும் நிலை தடுமாற வைக்கின்றது.



Singer Cup போட்டிகளை அடுத்து இலங்கை அணிக்கு எதிராக South Africa 3 Test போட்டிகளை ஆட இருக்கின்றது. முதல் போட்டி July 20, 25ஆம் திகதி வரை நடைபெற்றது. இதுவரை காலத்தில் Cricket சரித்திரத்தில் ஏற்படுத்தாத ஒரு சாதனையை இலங்கை அணி முரளிதரன் மூலம் சாதித்துள்ளது. இதுவே முதல் முறை South Africa அணியை இலங்கை அணி இன்னிங்சால் வென்றுள்ளது. இவற்றுக்கெல்லாம் சிகரம் வைக்குமாற்போல் முரளிதரன் முதல் இன்னிங்சில் 6 விக்கெட்டுக்களையும், இரண்டாவது இனிங்சில் 7 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி மொத்தமாக ஒரு ஆட்டத்தில் 13 விக்கெட்டுகளை சரித்து சாதனை ஏற்படுத்தியுள்ளார். Test ஆட்டங்களில் இதுவரை 21 தடை-வகள் 5 விக்கெட்டுகளையும் 5 தடவைகள் 10 விக்கெட்டுக்களுக்கு மேல் ஒரே ஆட்டத்தில் வீழ்த்தியும் முரளிதரன் சாதனை படைத்துள்ளார். இவ் Test ஆட்டத்தில் 13 விக்கெட்டிகளை வீழ்த்தியதால் Man of ten Match விருது மீண்டும் முரளிதரனுக்கே கிடைத்துள்ளது. ஆட்டமுடிவில் South Africa Captin உரை நிகழ்த்தும் போது கூறி உள்ளார் உலகத்தில் உள்ள அனைத்து நாடுகளின் கிரிகெட் Captin சகலரும் முரளிதரன் போல் ஒரு பந்து வீச்சாளர் தங்களுக்கு கிடைக்கமாட்டார்களா என்று கனவு காண்கிறார்கள் என்றார். இந்த வரையில் இலங்கையின் முன்னைநாள் கப்டன் ரணதுங்காவும், தற்போதைய கப்டன் ஜெயசூரியாவும் மிகவும் அதிஸ்டசாலிகள் என்றே கூறவேண்டும் என மேலும் கூறியுள்ளார்.

### அறிவித்தல்

ஆரோக்கிய வாழ்வு, விண்வெளி, ஒரு சாதாரண மனிதனின் சிந்தனையிலிருந்து ஆகியவற்றின் தகவல்கள் அடுத்த இதழில் தொடரும்.




TAMIL INSURANCE CLAIMS CONSULTANT
தமிழில் இலவச ஆலோசனை
வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?
RAVI தகுந்த ஆலோசனை RAVI
உரிய நட்ட ஈடு ⟸ RAVI ⟹ சட்ட உரிமை
விபத்துக்குள்ளானவரின் சம்பள இழப்பீடு
மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள ரவி நடராஜா (12 வருடத்திற்கு மேலான அனுபவம்)
TEL:(416) 245-6555
FAX:(416) 245-7766
2095 Weston Rd. #201 (South of HWY 401)
Toronto, Ont.,M9N 1X7

YARL WINDOW COVERING
1530 WARDEN AVENUE
உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இப்பொழுதே தொடர்புகொள்ளுங்கள்
CUSTOM MADE..
* VENETIAN BLINDS
* VERTICAL BLINDS
* ROLLER BLINDS
* PLEATED SHADES
* DRAPERIES

இருபத்தாறு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் திரைச் சேலைக் தைத்தக் கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: என். செல்வம்
(416) 383-0205
(416) 650-0377
FREE ESTIMATE


PSYCHIC PALM, CARD, CRYSTAL BALL READER AND ADVISOR ON ALL PROBLEMS
I have the power to break all bad luck, evil influence and restore success and happiness once again. I am one of the seven sister who was born with the gift of life. If you are suffering from illness, broken homes, financial, jobs or separation, I will guarantee to help you 100%. Ask what you want in life and you shall receive it from me. I 've helped many by phone and letters from others in other countries. The impossible will take a little longer.
*One visit only or one phone call is all you need to do.*

MY WORK IS 100% GUARANTEED
OPEN SEVEN DAYS A WEEK
FRO APPOINTMENT CALL
(416) 285-7765

978 WARDEN AVENUE, (NORTH OF EGLINTON)

MARRIAGE BROKER

நல்ல ஜாதகங்கள் கையிருப்பில் இருக்கிறது. செவ்வாய் தோசமுள்ள ஜாதகங்களும் உண்டு. மேலதிக தொடர்புளுக்கு: :416 438-3281

Aruna Food
EAST WEST INDIAN AND CANADIAN GROCERIES
* துரித பணமாற்றுச் சேவை
* VIDEO CONVERT SYSTEM
நாங்கள் எந்த மலிவு விலையையும் சமன் செய்வோம்.
அருணா பூட்
3585 Keele Street, Unit 11
North York, Ont. M3J 3H5
Tel: 416- 638-9554
Fax: 416- 638-9584

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

*–தொகுப்பு - பரம்*

கடந்த இதழில் எழுதியிருந்தது போன்று 1979ஆம் ஆண்டு 99 படங்கள் வெளிவந்திருந்தன. இதுவரை வந்த ஆண்டுகளில இதை ஆண்டு வந்த படம் கூடுதலாகக் காணப்பட்டது. 1979இல் பாரதிராஜா அவர்களால் தரப்பட்ட படங்கள் 'புதியவார்ப்புகள', 'நிறம் மாறாத பூக்கள'. 1977 இல் சினிமாவில் கால்பதித்த இயக்குனர் இமயம் '16 வயதினிலே', 'கிழக்கே போகும் ரயில்', 'சிவப்பு ரோஜாக்கள்' என்று பெரும் வெற்றிப் படங்கள் வரிசையில் 'புதிய வார்ப்புகள்', 'நிறம் மாறாத பூக்களும்' சேர்ந்து கொண்டன.

'புதிய வார்ப்புகள்' ஒரு புதியரகமான கதையாக இருந்தது. எதிர்பார்த்தது ஒன்று நடந்தது வேறு ஒன்றாக இருந்தது. பாக்கியராஜ் கதாநாயகனாக பதவி பெற்ற படம், ரத்தி என்ற புது நடிகையும், சந்திரசேகர் என்ற நல்லதொரு நடிகரையும் இனம் கண்டு கொடுத்த படமும் புதிய வார்ப்புகளே. இதே ஆண்டு பாரதிராஜா அவர்களால் [illegible]விட்டு 100 நாட்களை தாண்டி ஓடிய படம் 'நிறம் மாறாத பூக்கள்'. இந்தப் படம் அன்றைய காலத்தில் இலங்கை 52 வாரங்கள் தொடர்ந்து ஓடிச் சாதனை புரிந்தது. இதில் சுதாகர், விஜயன் தோன்றியிருந்தார்கள். 1977இல் இயக்குனராகிய இமயம் அவர்கள் 1979வரை 5 வெற்றிப் படங்களைத் தந்து தனக்கென ஒரு முத்திரையை உருவாக்கிக் கொண்டார். 'அழகே உன்னை ஆராதிக்கின்றேன்' ஸ்ரீதரின் டைரக்ஷனில் வெள்ளி விழாக் கொண்டாடிய நல்ல படம். இப்படம் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டது.

சிவகுமார், சோபா நடிக்க A. மாதவன் இயக்கிய படம் "ஏணிப்படிகள்". இது "சீதாலஷ்மி" என்ற தெலுங்குப் படத்தின் தமிழாக்கமாகும். 'இனிக்கும் இளமை', 'அகல் விளக்கு' ஆகிய இருபடங்களில் விஜய்காந்த் நடித்தவை ஆகும்.ரஜினிகாந்த நடித்து வெளிவந்த படங்கள் ஆறு ஆகும். 'நினைத்தாலே இனிக்கும்,' 'தர்மயுத்தம்', 'ஆறிலிருந்தி அறுபது வரை' , 'நான் வாழவைப்பேன்', 'அன்னை ஓர் ஆலயம், மற்றும் அலாவுதீனும் அற்புத விளக்கும். இவற்றில் நான் வாழவைப்பேன். திரைப்படத்தில் நடிகர் திலகத்துடன் சூப்பர் ஸ்டார் சேர்ந்து நடித்து இருந்தார்.

1979ஆம் ஆண்டு ரஜினிகாந்திற்கு ஒரு சோதனையான ஆண்டாகச் சொல்லப்படுகிறது. இடைவிடாது படங்கள் நடித்ததால் நேவர்ஸ் பிறேக்டவுன் (Nervous Beak-down) ஆகி பல தடவை ஆஸ்பத்திரியில் இருந்தார். இந்தக் காலத்தில் இவரைப் பற்றி பலமாதிரியும் பல பத்திரிகைகளும் எழுதின.

ஆனால் இந்த ஆண்டு வந்த படங்கள் ஆறிலிருந்து அறுபது வரை, அன்னை ஓர் ஆலயம் பல சிறப்புகளைப் பெற்று ரஜினிக்கு நல்ல பெயரைப் பெற்றுக் கொடுத்தன. புகழ் உச்சியிலிருந்து சில பிரச்சினைகளால் பாதாளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரஜினியை இந்தப் படங்கள் மீண்டும் உயர்த்தி வைத்தன. இதற்கு முதல் ஆண்டு சிவாஜியுடன் சேர்ந்து ஜஸ்டிஸ் கோபிநாத்தில் நடித்த ரஜினி, இந்த ஆண்டு' நான் வ[illegible]வைப்பேன்' என்ற படத்தில் சிவாஜியுடன் நடித்தார். 1975ஆம் ஆண்டு ஆகஸ்ட் [illegible]ம் திகதி அபூர்வ ராகத்தில் தொடங்கிய ரஜினி 1979ஆம் ஆண்டு முடிவதற்குள் 32 தமிழ்ப் படங்கள் நடித்து முடித்து விட்டார். கமல்ஹாசனின் நினைத்தாலே இனிக்கும், தாயில்லாமல் நானில்லை, . 'அலாவுதீனும் அற்புதவிளக்கும், நீயா, கல்யாண ராமன், மங்கள வாத்தியம் நீலமலர்கள் என்ற படங்கள் வெளிவந்தன. இதில் நினைத்தாலே இனிக்கும் மற்றும் அலாவுதீனும் அற்புத விளக்கும் படங்கள் ரஜினியுடன் சேர்ந்து நடித்தார். இவற்றில் நூல் வேலி, நினைத்தாலே இனிக்கும் என்ற படங்கள் பாலச்சந்தரால் டைரக்ஷன் செய்யப்பட்டது.

ஏற்கனவே கூறப்பட்டது போல், 1979ஆம் ஆண்டு தமிழ் சினிமாவிற்கு வித்தியாசமான ஆண்டுகளில் ஒன்றாகக் கொள்ளலாம். பல நிகழ்ச்சிகள், பல கூட்டுகள், புதிய நடிக நடிகைகள், புதிய இயக்குனர்கள், டைரக்டர்கள் வரவு. சிறந்த பல நல்ல படங்களைத் தந்த ஆண்டாகக் கொள்ளலாம். 1980ஆம் ஆண்டு அடுத்த இதழில் தொடரும்.



கவிஞர் வைரமுத்து

### 47வது இந்திய தேசிய விருது

47வது (1999) தேசிய திரைப்பட விருதுகளில் 6 விருதுகள் தமிழ் படங்களுக்கு கிடைத்துள்ளது. தமிழ் சினிமா எவ்வளவு தூரம் முன்னேறியுள்ளது என்பதை இந்த 6 விருதுகளும் எடுத்து காட்டுகிறது. இது தமிழருக்கும் தமிழ் சினிமாக்கும் பெருமையை தேடி தந்த ஒரு விடயமாகும்.

இந்தியாவில் சிலரால் கடுமையாக விமர்சிக்கப்பட்ட "ஹேராம்" இந்த 6 விருதுகளில் 3 விருது பெற்றுள்ளது. கமலஹாசனுக்கு கிடைக்க வேண்டிய சிறந்த நடிகருக்கான விருது மோகன்லாலுக்கு கிடைத்தது கவலைக்குரிய விடயமாகும். இதற்கு காரணம் ஹேராமில் அவர் ஏற்று நடித்த பாத்திரமோ என்னவோ?

[illegible]ர்முதலில் கமல் தயாரித்து இயக்கி நடித்த இந்த படத்தில் "காஸ்ட்டியூம் டிசைனர்" அதாவது தமிழில "ஆடை வடிவமைப்பாளர்" விருது சரிகா கமலஹாசனுக்கு கிடைத்தது. இதற்கு அவர் பல்வேறு நூலகங்களுக்குச் சென்று பழங்கால புத்தகங்களைப் புரட்டியும், பம்பாய், கல்கத்தா சென்னை ஆகிய நகரங்களில் வாழ்ந்தவர்களின் ஆடை அணிமணிகளையும், அவர்களின் சிகை அலங்காரங்கள், அக்காலத்து நாழிதழ்கள் போன்ற இன்னும் பல விடயங்களையும் கதை நடந்த காலத்திற்கேற்ப சேகரித்த போட்டது இந்த விருதை பெற்றுக் கொள்ள வழிவகுத்தது எனலாம்.

'ஹேராம்' படத்தில் சிறப்பாக நடித்ததற்காக அதுல் குல்கர்னி என்ற நாடக நடிகருக்கு சிறந்த துணை நடிகர் என்ற தேசிய விருது கிடைத்திருக்கிறது. படத்தில் ஸ்ரீராம் அபியங்கர் என்பதுதான் இவர் ஏற்றிருந்த பாத்திரத்தின் பெயர். மகாராஷ்டிரத்திலுள்ள சோலாப்பூர் சொந்த ஊர். தேசிய நாடகக் கல்லூரியில் பயின்றவர். இப்படத்தில் சொந்தமாகத் தமிழ் பேசி நடித்திருக்கிறார்.

கவிப்பேரரசு வைரமுத்து நான்காவது முறையாக தேசிய விருதினைப் பெற்றிருக்கிறார். 'முதல் மரியாதை' படத்தில் 'பூங்காற்று திரும்புமா", 'ரோஜா' படத்தில் 'சின்னச் சின்ன ஆசை', 'கருத்தம்மா'படத்தி;; போறாளே பொன்னுத்தாயி" ஆகிய படப்பாடல்களுடன் இவ்வாண்டு 'சங்கமம்' படத்தில் 'முதல் முறை கிள்ளிப்பார்த்தேன்' என்ற பாடலுக்கு தேசியவிருது கிடைத்தது. இப்பாடலில் விஞ்ஞானம், இலக்கியம், அன்பு, காதல் ஒருங்கே காணப்பட்டதால் விருதைத் தட்டிக்கொண்டது. *-நன்றி தேவிமணி*


EZ DRIVING SCHOOL



நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த
மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச
அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம்
பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்
JEYAKUMAR ✆ (416) 283-4100
Cell: 822-6741 (10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)

KD FINANCIAL SERVICES
Vamadevan Jeyamohan (Jey)
(President)
Royal Bank Approved Third Party Referral Agent
VISA CARDS UPTO $5000
புதியவர்கள் (Fresh Credit) அல்லது நல்ல நிலையில்
கிறடிற்றை (Good Credit History) வைத்திருப்பவர்களிற்கும்
வேலை செய்யும் கடிதம் (Employment Letter)
உடையவர்களிற்கும் விசா காட் எடுத்துத் தரப்படும்
Tel: (416) 431-9315 Fax: (416) 431-2119
Cell: (416) 575-8427 EmailL: Jeys@ica.net
தொடர்புகளுக்கு: weekdays - 5:30pm - 10:00 pm.
Nada Jeyadevan Financial Rep.
Tel: -(416) 398-4760 10:00Am - 8:00pm

Safety Truck
Training School Ltd.
Training & Trucking Classes A, D & Z
கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (6ம் ஆண்டு)
வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.
We accept Welfare & Unemployment Insurance




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும்.
வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

In Classes
• 365 (Learning Permit)
• Lock Books
• Air Brake (Z)
• Dangerous Goods
• Border Crossing
• Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்
YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
(12 Years Canadian Experience with Trucks)
Tel: (905) 793-9546 / (416) 616-5979
250 Summerlea Road, Brampton, ON

# 21ஆம் நூற்றாண்டில் கணணி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?

-ராஜா சொக்கலிங்கம் raja@systemsplus.net
Computer Consultant



## பகுதி 14

### கணணியின் உயிர்நாடி

[ Computer's Operating System]

கடந்தவாரம் இந்த Operating System கணணி உலகத்திற்கு கிடைத்த ஒரு பேறு என்று பார்த்தோம். Windows என்று பார்த்தால், Windows 3.1 இன் வளர்ச்சி தான் Win. 95. இது எல்லோராலும் பயன்படுத்தப்பட்ட நல்ல ஒரு Program. Windows 95 இற்கு அடுத்த படி என்னவென்றால் Windows 98.



Win 95 இற்கும் Windows 98 இற்கும் என்ன வேறுபாடு என்று பார்த்தால், ஒரு சில குறைபாடுகள் இருந்தன. குறைபாடுகள் என்னவென்றால் சில வசதி குறைவான செயல்பாடுகள் அதாவது கடினமான செயல்பாடுகள், விடயங்கள் ஆகும். இன்னும் எமது வசதிக்காக சுலபமான பல விடயங்கள் சேர்த்துக்கொண்டு வந்ததுதான் Win.98. Win. 95 இல் இருந்த பயன்பாடுகளையெல்லாம் இன்னும் அதிகப்படுத்தி மேலும் உங்களிற்கு உதவியாக சிறந்த நண்பனாக அமைந்தது தான் இந்த Win 98. இன்னும் பலபல சிறந்த விடயங்களுடன் சேர்ந்து வளர்ந்ததுதான் இந்த 98 Operating System. இந்த நேரத்தில் பலருக்கு தெரியாத அல்லது தவறாக விளங்கிக் கொண்ட ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால் Win 98 இன் அடுத்த படி என்ன வென்று பலர் நினைத்து கொண்டிருப்பது. Win 3.1 இன் அடுத்த வளர்ச்சி அல்லது அடுத்த படி தான் Win. 95. Win 95 இன் அடுத்தபடி அல்லது வளர்ச்சிதான் Win 98. ஆனால் win 98 இன் அடுத்தபடி அல்லது வளர்ச்சி Win 2000 என்று பலர் நம்பிக் கொண்டு இருப்பது மிகமிகத் தவறு. ஏனென்றால் Win 98ம் win 2000ம் பார்ப்பதற்கு ஒன்று போல் இருப்பதால் இது அதனுடைய வளர்ச்சி என்றும் அல்லது Win 2000 அடுத்த இலக்கம் அதாவது 98, 99, 2000 என்று பலர் நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இப்படியாக நாம் நினைப்பது தவறு . Win 98 இன் அடுத்தபடி அதாவது வளர்ச்சி win 2000 அல்ல என்பது இந்தக் கட்டுரையில் நான் முக்கியமாக சேர்த்துக் கொண்டுள்ள விடயம்.

Win 98 இன் அடுத்தபடி அல்லது அடுத்த வளர்ச்சி Windows ME என்று சொல்லப்படும் அல்லது windows Millennium Edition என்று சொல்லப்படும். இதுதான் Win 98 இன் அடுத்தபடி வளர்ச்சி. Win 98 இன் Upgrade இதுதான். அப்படியானால் Win 2000 என்றால் என்ன என்று நீங்கள் கேட்கலாம். வீட்டு உபயோகத்திற்காக எழுதப்பட்ட Win 95, Win 98 என்பன சாதாரண Program கள். ஆனால் அலுவலகங்களில் இரண்டு மூன்று கணணிகளை ஒன்றிணைத்து இயங்கக்கூடிய கணணிகளுக்கு பாவிக்கப்படும் Operating System Win 3.11 இன் Work Group என்று சொல்லப்படும் அந்த கணணிகளை இயக்கக்கூடிய Programகள் முன்பு இருந்தது. அதனுடைய வளர்ச்சி என்று சொல்லுவதை விட அதற்கு இணையாக அதைவிடப் பாதுகாப்பாக உள்ள ஒரு Program Windows NT என்று சொல்லப்பட்டது எல்லோரும் அறிந்தே. Win NT என்றால் Window New Technology அல்லது Windows Network என்று எல்லோராலும் கருதப்பட்டு வந்தது. இதை வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தாமல் விட்டால் கூட அது உண்மையில் பல பெரிய நிறுவனங்கள் அல்லது மூன்று அல்லது நான்கு கணணிகளை இணைத்து பயன்படுத்தப்படுகிறது. அது மிகவும் பாதுகாப்பாக வேறு யாரும் பயன்படுத்த முடியாமல் Password போன்ற மிகப் பாதுகாப்பான வலையமாக அமைந்தது அந்த NT.

Win 3.11 Work Group இருந்த அதே சமயத்தில் Win NT ஐயும் எழுதியிருந்தார்கள். அந்த Win NT இன் வளர்ச்சி 4.1 வரை வளர்ந்தது. பின்பு 4.1 இன் அடுத்த வளர்ச்சி Win NT 5 என்று எழுத நினைத்திருந்தார்கள். அந்த Win NT 5 ஐத் தான் Win 2000 என்று மாற்றினார்கள். இங்கு உபயோகிப்பவர்கள் பலருக்கு குழப்பம் ஏற்பட்டது.

இதைத்தான் பலரும் Win 98 இன் அடுத்த பரிமாணம் Win 2000 என்று நினைத்தார்கள். எனவே இந்த வேறுபாடு இப்போது உங்களுக்கு விளங்கி இருக்குமென நினைக்கின்றேன். Win NT 4.1 இன் அடுத்த வளர்ச்சியான Win 2000 மிகப்பாதுகாப்பான (More Security) தொழில்களுக்கு தொழில் ரீதியான விடயங்களுக்கு இதை எழுதினார்கள். இது இந்தக் காலத்தில் மிகவும் முக்கியம் ஏனென்றால் முன்பெல்லாம் கணணி என்பது வீட்டிற்கு அல்லது சிறிய அலுவலகத்திற்கு 2,3 கணணிகளை வைத்து இயக்கிகொண்டிருந்த காலம் ஆனால் இப்பொழுது Internet என்று சொல்லப்படும் உலக வலையினூடாக உங்களுடைய கணணி எத்தனையோ பல கணணிகளுடன் இணைந்து இருக்கின்றது என்பதை மறந்து விடாதீர்கள்கள். உங்களுடைய கணணியை யார் எங்கு பார்க்கிறார்கள் என்று உங்களுக்கே தெரியாது. உங்களுடைய கணணி மூலமாக உலகத்தில் எங்கேயாவது இயங்கிக் கொண்டு இருக்கும் கணணியைப் பார்க்கக் கூடிய வாய்ப்பு இந்தக் காலத்தில் இருக்கிறது. அதுதான் Internet. இது ஒரு பக்கமாகப் பார்த்தால் உங்களுக்கு சந்தோசமான ஒன்று. ஆனால் மறுபக்கம் பார்த்தால் பாதுகாப்புக் குறைவு கணணியில் நீங்கள் வைத்திருக்கும் எந்தவித கோப்புகளிற்கும் பாதுகாப்புக் குறைவு. இது நீங்கள் வீட்டில் அறையில் இருப்பதுவும், வீட்டிற்கு வெளியில் இருப்பது போலவும் இருக்கும்.

இப்படித்தான் உங்கள் கணணியில் இருக்கும் Program களை யாரும் பார்க்கக்கூடிய வசதிகள் உங்கள் கணணிக்குள் வந்து எதையும் செய்யக்கூடிய வாய்ப்புகள் இப்பொழுது இந்தக் காலத்தில் ஏற்பட்டு இருக்கின்றது. இப்பொழுது இந்த Window 2000 மிக முக்கியமானது என்று சொல்லலாம். அதாவது பாதுகாப்பின் முக்கியத்தை இதற்கு கொடுத்திருக்கின்றார்கள். இதில் யாரும் உள்ளே வருவதென்றால் அதாவது உங்கள் வீட்டு கணணியில் உள்ளே போவதென்றால் Password மிகமிக முக்கியம் அதன்பின்பு Internet இற்கு செல்வதற்கு இன்னுமொரு Password என்று

Compu Service
COMPUTERS & NETWORK
(416) 399-3235 - (905) 432-2422
CONTACT - ALAN SIVA
@ (416) 431-3753
(416) 438-4357
(416) 399-3235
COMPUSERVICE
International
COMPUTER SALES
NEW & USED
NETWORK DESIGN
& INSTALLATION
REPAIRS
UPGRADES
CD BACKUPS
SOFTWARES
(905) 432-2422
*FAX: (416) 431-5828
Email: compuservice@compuserviceint.net
web: www.compuserviceint.net

நகரின் மத்தியில் பெரியதோர் தமிழ் நிறுவனம்
செறன்டிப்
(F) பிறஸ் மார்க்கட்
நாளாந்த பாவனைக்கு
தேவையான சகல
பொருட்களையும்
நாளாந்தம் மலிவு
விலைகளில் ஒரே
இடத்தில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே
இடம்
SERENDIB FRESH MARKET
Tel: (416) 269-9913
2631 Eglinton Ave. East, Scarborough, Ont. M1K 2S2





சொல்லலாம். அதாவது பாதுகாப்பின் முக்கியத்தை இத[illegible] கொடுத்திருக்கின்றார்கள். இதில் யாரும் உள்ளே வருவதென்றால் அதாவது உங்கள் வீட்டு கணணியில் உள்ளே போவதென்றால் Password மிகமிக முக்கியம் அதன்பின்பு Internet இற்கு செல்வதற்கு இன்னுமொரு Password என்று பலபல பாதுகாப்புகளைக் கொண்டுள்ளது. இது ஒரு தொழில்புரியும் அல்லது மிகப்பெரிய நிறுவனங்களில் இருக்கக் கூடிய அலுவலகங்களுக்கு இது சிறந்த ஒரு Operating System. மீண்டும் நான் சொல்லியிருப்பது Windows 98 என்பது வீட்டு உபயோகத்திற்காக எழுதப்பட்ட ஒரு சாதாரண நட்ப்பான Operating System. ஆனால் Win 2000 மிகவும் பாதுகாப்பான ஒரு Operating System. என்னுடைய அனுபவத்தில் Win 98 வைத்திருப்பவர்கள் அதில் உடனே Win 2000 ஐ Upgrade செய்து பலபல கஸ்டங்களை அனுபவித்துள்ளார்கள். ஏனென்றால் அதனுடைய உபயோகம் தெரியாது. இதுதான் அதனுடைய அடுத்தபடி என்று நினைத்து இருக்கின்றார்கள். இதைத்தான் இந்தக் கட்டுரையில் சொல்ல ஆசைப்பட்டேன்.



இந்த Win 2000 இன் உபயோகம் விரிவான விளக்கங்களை இன்னும் ஒரு கட்டுரையில் விரிவாகப் பார்க்க ஆசைப்படுகிறேன். ஆனால் இப்பொழுது நாம் எல்லோரும ஆவலுடன் எதிர்பார்த்திருக்கும் கனடாவில் இன்னும் வெளிவராத ஆனால் அமெரிக்காவில் வெளிவிடப்பட்டு விட்ட Windows Millennium Edition ஐப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்வது நல்லதென்று நினைக்கிறேன். Win 98 இல் என்னென்ன குறைபாடுகள் இருந்ததோ அவற்றை நீக்கி மிகக் கவனத்துடன் இந்த Millinnium Edition ஐ உருவாக்கி இருக்கிறார்கள். இது முக்கியமாக வீட்டு உபயோகத்திற்கு என்று வடிவமைக்கப்பட்டது. இது பார்ப்பதற்கு Win 98 போல இருந்தாலும் இதில் பல செயல்பாடுகள் இருக்கின்றது என்பதை நீங்கள் உ[illegible] வேண்டும். இதை நீங்கள் உங்கள் கணணியில் Install பண்ணுவதற்கு 64 [illegible] memory (Ram) இருக்க வேண்டும் என்பது முக்கிய விடயம். இதை அப்படித்தான் வடிவமைத்துள்ளார்கள். அப்படி இல்லாவிட்டால். உங்கள் கணணிக்கு இதை போடுவதற்கு ஆசைப்படாதீர்கள். அத்துடன் இதை Install பண்ணுவதற்கு 47[illegible] MB இடவசதி உங்கள் Hard drive இல் இருக்க வேண்டும். இதை Install செய்ய குறைந்தது 20 நிமிடங்கள் தேவைப்படுகிறது. அதாவது 10 நிமிடங்கள் File களை Copy பண்ணவும் மிகுதி 10 நிமிடங்கள் Hardware பகுதிகளைக் கண்டு பிடித்து அவைகளினுடைய Drivers களை Install பண்ணவும் எடுக்கின்றது. இதை செய்து முடித்ததும் Win 98 ஐ போல இருந்தால் கூட இதில் உள்ள Icon களை மாற்றி இருக்கின்றார்கள். பார்ப்பதற்கு அழகாக இருக்கின்றது. இந்த Windows Millennium Operating System Boot பண்ணி உபயோகத்திற்கு வருவதற்கு குறைந்தது 30 விநாடிகள் ஆகின்றது. உங்களுடைய கணணி சரியான அமைப்பில் இருந்தால் குறைந்தது 30 விநாடிகளில் Operating System Boot பண்ணி வரும்.

(தொடரும்)

*இதில் வரும் ஒருசில சந்தேகங்களையோ அல்லது எந்தத் துறையைப் பற்றி எழுதலாம் என்று நினைக்கிறீர்களோ என்பதைப் பற்றி **'உலக தமிழோசை'** க்கு நீங்கள் அறியத்தரவும்.* vlambaram @email. com



# T. R. S. AUTO

SPECIALIST
TOYOTA
HONDA

**MOTOR VEHICLE SPECIALISTS**


## FOR REPAIR & BUY & SELL



**OIL CHANGE SUNDAYS**
**$12.99**
Reg 14.99

உள்ளூர், இறக்குமதி செய்யப்பட்ட சகல ரக வாகனங்களுக்கும்
அனுபவம் வாய்ந்த மெக்கானிக்குகளால் சிறந்த
முறையில் திருத்திக் கொள்ள நாடுங்கள்

We Sell Quality Used Cars
Licensed Mechanics on duty
Guaranteed Services
Reasonable Rates
Free Visual Inspection and Proper Advice
Licensed to do Air Condition Services
We Rebuild Alternators & Starters
Rust Proofing
Body Work and paint



- TUNE - UP
- BRAKES
- GENERAL MAINTENANCE
- ELECTRICAL WORKS
- ALL KIND OF REPAIRS


**OIL & FILTER CHANGE WITH CASTROL GTX**

**ALARM, STEREO, ELECTRICAL WORKS USED PARTS SALES, ETC.**

**We sell New & Used Tire**

**SPECIAL**

| | |
|---|---|
| Wheel Balance & Tire Rotation | $22.99 |
| Front Brake Pad & Labour (Front Brake) | $59.99 |
| Rear BRAKE (Shoe & Labour) | $59.99 |




**Call: Kumar**

**Tel: (416) 609-8110**

**86 MELFORD DR. UNIT 14**

# கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?

# துரித பணமாற்று சேவை

## பணமாற்று சேவையில் தனித்துவமானவர்கள்



கனடிய டொலர்கள்

எத்திக்கும் நிதானமான பணவிகிதாசாரம்

## 43 ஆண்டுகள்

வர்த்தகத்துறையின் முன்னோடிகள் (இதில்) கடந்த 10 ஆண்டுகளாக கனடாவில் துரித பணமாற்று சேவையில் தமிழ் மக்கள் இதயங்களில் இடம் பிடித்தவர்கள்

தந்தையுடன் மைந்தனும் இணைந்த சேவையில், வாடிக்கையாளர்களின் தேவைகள் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு வருகின்றது.

உங்கள் பணம் பாதுகாப்புடனும் விரைவாகவும் சென்றடைய அழையுங்கள்




## புதிய அறிமுகம்

வாடிக்கையாளர்களின் வசதி கருதி வங்கி அட்டை மூலம் (BANK CLIENT CARD) மூலம் எமது காரியாலயத்தில் இருந்து பணம் அனுப்ப முடியும் என்பதை அறியத்தருகின்றோம்.

# TEL: (416) 267-8221

# M. KASIPPILLAI & SONS INC.

3228 Eglinton Ave. East, Suite #3, Scarborough, Ont M1J 2H6

CEYLON SUPER MARKET சிலோன் சுப்பர் மார்க்கட் CEYLON SUPER MARKET சிலோன் சுப்பர் மார்க்கட்

Ceylon

# சிலோன் சுப்பர் மார்க்கெட்

நவீன வசதிகளுடன், சுத்தமான முறையில் உங்கள்
நாளாந்த தேவைக்கான உணவுப்பொருட்களை
குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள "ஸ்காபரோ" நகரில் வசதியான இடம்


**உடன் பழவகைகள், மரக்கறி, மீன் வகைகள் இறைச்சி வகைகள்**

# புதிய அறிமுகம்

## VIP வாடிக்கையாளர் சேமிப்பு அட்டை




நீங்கள் ஒவ்வொரு
முறையும் எங்கள் ஸ்தாபனத்தில்
பொருட்கள் கொள்வனவு
செய்யும்பொழுது
உங்களிடமுள்ள (VIP)
வாடிக்கையாளர் அட்டையை
காசாளரிடம் கொடுத்து Scan செய்து
உங்கள் கொள்வனவுக்குரிய புள்ளியை சேர்த்துக்கொள்ளுங்கள்
ஒவ்வொரு 3 மாதமும் நீங்கள் சேமித்த புள்ளிகளின் பெறுமதிக்குரிய
பணத்தை நீங்கள் வாங்கும் பொருட்களுக்குரிய தொகையில் இருந்து குறைத்துக்கொள்ளலாம்.




உங்களுக்குரிய புள்ளிகள் கணணி மூலம் உங்கள் கணக்கு இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு செலவிடும் டொலருக்கும் 10 புள்ளிகள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை எமது ஸ்தாபனத்தில் பெற்றுக்கொள்ளலாம்

உங்கள் இலவச **VIP** அட்டைகளை எமது ஸ்தாபனத்தில் கேட்டுப்பெற்றுக்கொள்ளலாம்

எங்களிடம் பாட்டா செருப்புக்கள்
கிரிக்கெட் மட்டைகள்,
விக்கெட்டுக்களும்
விற்பனைக்கு உள்ளன

**We also have Bata Slippers**
**Cricket Bats and Wickets**

# FULLY AIRCONDITIONED


மற்றும் அனைத்துப் பொருட்களும் மலிவு விலையில்

போதியளவு Parking வசதிகளுடன்
உங்கள் வசதிக்காக Interac பாவிக்கலாம்
முற்றிலும் குளிரூட்டப்பட்ட நிலையம்

# Tel: (416) 490-9602

# CEYLON SUPER MARKET

## 2557 Warden Ave, Scarborough, ON.



# "ராசம்மாவின் ராஜ்யம்"

நகைச்சுவைத் தொடர்... (25)

*-கலகலப்பு தீசன்-*

சிரித்து சிந்திக்க



உலகரின் வீட்டுக் கதவு பூட்டியிருந்தது. ஆனால், கதவடியில் ஆட்கள் நடக்கும் சத்தம் கேட்க....



ஆட்டிலறி அன்னம்மா உலகர் வீட்டிக்கு வந்தது சாதாரண செய்தியா!
ரூபன், ரூபி, காதல் பிரச்சினை, ராசம்மாக்கா ஜேர்மனி செல்ல இருந்த விடயம்,
ரூபி Bag தூக்கிக் கொண்டு போனது, Camp ஐ விட்டு ஓடும் ஆமியைப் போல போனது அதே (Building)
கட்டடத்தில் குடியுள்ள சகல தமிழ் குடும்பங்களுக்கும் தெரிதும்.



தெரியாவிட்டாலும் சினேகம் பிடித்து செய்திகளைத் திணிக்க விசேட செய்திப் பிரிவு உலகரின் அதே பில்டிங்கில் உண்டு.

உலகரின் பில்டிங்கில் மட்டுமல்ல சகல பில்டிங்கிலும் இந்த செய்திப் பிரிவு, கிளைகள் அமைத்துள்ளது. வீடுகள் வாங்கி இருப்பவர்களிற்கு இந்தத் தொல்லை இல்லையென்பதல்ல. இந்த வீட்டுக்கு வீடு பிரச்சினையை வித்தியாசமான கோணங்களில் பரப்பிவிடும் இவர்கள் இதே நேரத்தை சமயம் தமிழ் பரப்ப நினைத்தால் தமிழ் என்றோ உயர்ந்திருக்கும்.

உலகரின் வீட்டில் அன்னம்மா விடயத்தால் அருகிலுள்ள இடியப்பம், கொத்து றொட்டி கடைகள் வியாபாரம் அந்த மாதிரி. தம் வீட்டு சமையலை விட்டு உலகர் வீட்டு பிந்திய செய்திகளை கேட்க ஏங்கியிருக்கும் போது யார் சமைப்பது? முன்னர் ஒரு முறை குறிப்பிட்டது போல பல வீடுகளில் இடியப்ப உரல், புட்டுக் குழல் போன்றவை கண்ணாடி அலுமாரிகளில் காட்சிப் பொருளாகி விட்டன.

அது சரி நான் ஊர்ப்புதினம் உலகர் புதினம் அறியவோ, அல்லது உலகண்ணை எப்பிட சுகம் எண்டு கேட்கவோ.... வரேல்லை... என்று சொல்லும் போதே... வழமையான இருமல் தொடங்கி விட்டது.

ராசாத்தி துடிதுடித்துப் போய் அன்னம்மாக்கா அதில தண்ணி கிடக்கு... என்று..... சொல்ல..... எனக்கு ஒருதரும் தண்ணி காட்ட வேண்டாம் என்று வெடுக்கென்று உலகரைப் பார்த்தா அன்னம்மாக்கா

**பார்வை ஒன்றே போதுமே!**
என்ற பாடல் எத்தனை அர்த்தம்.



பார்வை மிதிலையில் வீட்டு யன்னலில் நின்று ராமரையே காதலில் பின்ன வைத்த சீதையின் - பார்வை
அயோத்தியில் ராமன் விளையாட்டுப் பருவத்தில் கூனியின் முதுகில் விளையாட்டாக எய்த கோணி படும் போது ராமரை கூனி பார்த்தது ஒரு -பார்வை



ராமரை கூனி பார்த்தது ஒரு பார்வை
மாதவி கோவலனை பார்த்தது ஒரு பார்வை

மதுரையில் கோவலன் கொலை
செய்யப்பட்டவுடன்
கண்ணகி மதுரையைப் பார்த்தது ஒரு பார்வை

ஆச்சிரமத்தில் சகுந்தலை, துஷ்யந்தனை மெய் மறந்திருந்தபோது விஷ்வாமித்திரர்
சகுந்தலையை பார்த்தது ஒரு பார்வை

மதுரையில் பாண்டியன் சபையில் கோபம் கொண்ட சிவன் நக்கீரனை தன் நெற்றிக்கண்ணால்
பார்த்தது ஒரு பார்வை



**அடங்கியவர் என்றும் வெற்றி கண்டதில்லை.**
**அடங்கியவர் அமைதியாக இருந்தது இல்லை**


சாது.... மிரண்டால் என்று அன்னம்மாக்கா தொடங்க...
காடு கொள்ளா என வில்லுப்பாட்டில் பக்கப்பாட்டு பாடுவது போல முடித்தா...
ராசாத்தியக்கா....




ராசம்மா.... இஞ்சாலை வா.... ஏன் மூலைக்கை நிக்கிறாய் என்டு அன்னம்மாக்கா கூப்பிட..... பிள்ளையளைப் பெத்து பின்னடிக்கு சந்தோசமா... இருக்கலாம் எண்டால் அதுகள் கடைசியிலை... எங்களை கலங்க வைக்குதுகள் என்ற படி வெளியில் வர புதிய நடிகைகளுக்கு சோகக் காட்சிக்கு கிளிசரின் பூசும் போது வரும் கண்ணீர் போல ஒரு சில கண்ணீர்த் துளிகள்... அரும்பிய போது
கண்ணைத்துடை ராசம்மாக்கா புதுக்காப்பறில்.. கண்ணீர், விழப்போகுது என


கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்
விருது பெற்ற

**VIVEKA PRINTERS**



உங்கள் அச்சுவேலைகள் எதுவாக
இருந்தாலும் முதலில் நீங்கள்
நாடவேண்டிய இடம்
80 BARBADOS BLVD., UNIT #4
SCARCOROUGH, ONT.
S.ஸ்ரீதரன் -(416) 410-6401



**ELECTRICAL REPAIRS**
உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள்
றேடியோக்கள் வீடியோக்களை குறைந்த
செலவிலும்,சிறந்த முறையிலும்
